₹100/-

4 - 9

ஞானகுரு

# மகிழ்ச்சி

புரட்டாசி 2025

எஸ்.கே.முருகன்

## துன்பத்திற்கு டீ சாப்பிடுங்கள்





Online
கவுன்சிலிங்
WhatsApp Call Only

கணவன், மனைவி, குழந்தைகள் உறவுச் சிக்கல்களுக்குத் தீர்வு

மனவள ஆலோசகர்
எஸ்.கே.முருகன்
ஞானகுரு கவுன்சிலிங்.
முன்பதிவுக்கு : +91 80725 89355

www.gyaanaguru.com



ஆசிரியர் பக்கம்

# சேமிப்பு அல்ல, செலவழித்ததே சொத்து



நிறைய செல்வம், பெரிய வீடு, கார், தோட்டம் போன்றவையே மிகப்பெரும் சொத்து என்றும் தங்களுடைய பலம் என்றும் மக்கள் நம்புகிறார்கள். அதனாலே சேமித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

கையில் பணம் இருந்தாலும், வெளிநாடு சுற்றிப் பார்க்கும் ஆசை இருந்தாலும், அதனை செயல்படுத்துவதற்குத் தயங்குகிறார்கள். எதிர்கால அவசரச் செலவுக்குத் தேவைப்படலாம் என்று பணத்தைப் பாதுகாக்கிறார்கள். ஆனால், இப்படி பாதுகாக்கப்படும் சொத்து, பணம் போன்றவை, அவர்களுடைய பிள்ளைகள் அல்லது மற்றவர்கள் அனுபவிக்கவே போய்ச் சேர்கிறது.

எனவே, சம்பாதித்து சேமித்து வைப்பதை உங்கள் சொத்தாகக் கருத வேண்டாம். இதுவரை நீங்கள் மகிழ்ச்சியுடன் அனுபவித்தது, ஆசையுடன் செலவழித்தது, பல்வேறு இடங்களை சுற்றிப் பார்த்தது, கற்றுக்கொண்டவை, கொண்டாட்டம் போன்ற அனுபவங்களே உண்மையான சொத்து.

மனதில் என்றென்றும் தங்கியிருக்கும் இந்த அனுபவங்களே நிஜமான சொத்து. இப்படிப்பட்ட அனுபவங்கள் அடைவதற்கு செலவு செய்யத் தயங்காதீர்கள்.

ஏனென்றால் தங்கம், பணம் போன்றவை காணாமல் போகலாம். சொத்துக்களை இழக்க நேரிடலாம். ஆனால் வாழ்நாளில் பெற்றுக்கொண்ட அனுபவங்களை யாராலும் திருட முடியாது; காலத்தாலும் அழிக்க முடியாது. ஒரு பயணத்தில் கிடைத்த அனுபவம், பார்த்த காட்சிகள், சந்தித்த நபர்கள், சிரிப்பு, கண்ணீர், சந்தோஷம் போன்றவை மனதின் ஆழத்தில் பதிந்துவிடுகின்றன.

ஒவ்வொரு அனுபவமும் சுகம் அல்லது துக்கமாக இருக்கலாம். ஆனால், அவை நமது சொத்தாகவும் சக்தியாகவும் மாறுகிறது. தவறுகள் படிப்பினையாகவும், வெற்றிகள் ஊக்கமாகவும் செயல்படுகின்றன. நிறைய அனுபவங்களே வெற்றிகரமான வாழ்க்கையைக் குறிக்கிறது.

ஆகவே, அனுபவங்களைப் பெறுவதற்கு மனப்பூர்வமாக செலவு செய்யுங்கள். இந்த செலவுதான் உங்களுக்கு சொத்து. இந்த சொத்துதான் நிஜமான மகிழ்ச்சி.

# ஜென்டில்மேன், ஜென்டில் உமன்



## எப்படி இருப்பாங்க

குனிந்த தலை நிமிராமல் செல்போன் பார்த்தபடி அவரவர் வழியில் மனிதர்கள் செல்லும் காலகட்டத்தில் வாழ்கிறோம். ஆனாலும், ஒருசிலர் அடுத்தவர்கள் விஷயத்தில் தேவையில்லாமல் மூக்கை நீட்டுகிறார்கள்.

இந்த காலத்தில் ரொம்பவும் டீசண்ட் பார்ட்டி என்பதற்கு சில இலக்கணம் இருக்கிறது. அவற்றை தெரிந்துகொண்டு பின்பற்றுங்கள்.



www.gyaanaguru.com



● ஒருவர் செல்போன் அழைப்பை எடுக்கவில்லை என்றால் மீண்டும் மீண்டும் அழைக்க வேண்டாம். அது வில்லத்தனம். ஒரு மெசேஜ் அனுப்பிவிட்டு அவர் லைனுக்கு வரும் வரை காத்திருங்கள்.

● சிறிய தொகையை ஒருபோதும் கடன் கேட்காதீர்கள், அதை சமாளிக்கும் வழியை பாருங்கள். அதேபோல் பிறருடைய பணத்தை, அலுவலகப் பணத்தை ரொட்டேட் செய்யாதீர்கள்.

● வயது, சம்பளம், எப்போது திருமணம், எப்போது குழந்தை என்றெல்லாம் யாரிடமும் கேட்கவே கேட்காதீர்கள்.

● தயவுசெய்து, மன்னிக்கவும், நன்றி போன்ற வார்த்தைகளை பேச்சுக்கு இடையில் தயக்கமின்றி பயன்படுத்துங்கள். இவை அற்புதங்கள் செய்வதைக் காண முடியும்.

● பிறர் பேசிக்கொண்டிருக்கும் நேரத்தில் ஒருபோதும் இடையில் புகுந்து பேசாதீர்கள். அவர் முழுமையாக பேசிய பிறகு உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

● பிறர் பேசிக்கொண்டிருக்கும் நேரத்தில் செல்போன் நோண்டாதீர்கள்.

● ஹோட்டலில் குடும்பத்துடன் போனாலும் நண்பர்களுடன் போனாலும் அடுத்தவர்களுக்கு நீங்கள் ஆர்டர் செய்யாதீர்கள், அவரவர்கள் தேவை யானதை வாங்கிக்கொள் வார்கள்.

● உறவினர்கள், நண்பர்கள் யாராவது வரும் நேரத்தில் டிவி பார்த்துக்கொண்டு பேசாதீர்கள். டி.வியை வால்யூம் குறைத்து வைத்துப்பேசுவது, மியூட்டில் போட்டு பேசுவதும் சரியல்ல.

● டிராபிஃக்கில் நிற்கும்போது ஹார்ன் அடிக்காதீர்கள். எல்லோருமே விரைந்து போகவே நிற்கிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டு அமைதியாக இருங்கள்.

● பயணத்தில் யாரேனும் முந்திச் செல்வதற்கு அலை பாய்கிறார்கள் என்றால், உடனே விட்டுக்கொடுத்து வழி விடுங்கள். இவர்களே நிறைய விபத்து களுக்குக் காரணமாகிறார்கள்.

● பயணத்தில் வழி தெரியவில்லை என்றால் நடுரோட்டில் நின்றுகொண்டு சந்தேகம் கேட்காதீர்கள்.

● வாஸ்து அமைப்பு சரியில்லை, சட்டை கலர் சரியில்லை என்றெல்லாம் யாரிடமும் சொல்லாதீர்கள். ரசனையை விமர்சனம் செய்வது சரியில்லை.

● கடன் கேட்பவர்களுக்கு பணம் கொடுங்கள் அல்லது இல்லை என்று சொல்லுங்கள். காரணம் கேட்காதீர்கள்.

● வாங்கிய கடனை சரியான தேதியில் திருப்பிக் கொடுங்கள். பணம் கொடுக்க முடியவில்லை என்றால் முன்கூட்டியே எப்போது தரமுடியும் என்பதைச் சொல்லி விடுங்கள். கடைசி நாள் வரை காத்திருந்து இல்லை என்று சொல்ல வேண்டாம்.

● ஒருவரின் உடல் அமைப்பைப் பற்றி பேசவேண்டாம். குண்டு, வழுக்கை, தொப்பை, கண்ணாடி என்பது அவர்களுடைய மனதைப் பாதிக்கலாம்.

● வேலைக்காரர், தள்ளுவண்டிக்காரர், கடைநிலை ஊழியர் என்றாலும் மதிப்பு கொடுத்துப் பேசுங்கள்.

இவற்றை எல்லாம் உங்கள் வாழ்க்கை யில் ஒரு பழக்கமாகவே கொண்டுவந்து விட்டீர்கள் எல்லாம், நீங்க தான் பர்ஃபெக்ட் ஜென்டில்மேன், ஜென்டில்உமன்.







# பிடிவாத குணம் பெண்ணுக்கு ஏன் அதிகம்..?

பிடிவாத குணம் பற்றி உரை நிகழ்த்திக் கொண்டு இருந்தார் ஞானகுரு. அவரை தொந்தரவு செய்யாமல் அருகில் அமர்ந்து கேட்டார் மகேந்திரன்.

”தான் நினைப்பது மட்டுமே சரி என்ற பிடிவாத குணம் கொண்டவர்கள் காலம் காலமாக இருக்கிறார்கள். இவர்களை திருத்திவிடலாம், மாற்றிவிடலாம் என்று மல்லுக்கட்டுவது பொதுவாக நல்ல பலன் தருவதில்லை.

பிடிவாதம் என்பது ஒரு நெருப்புத் துண்டு. சிறிதாக இருக்கும்போது எளிதாக ஊதி அணைத்துவிடலாம். பெருநெருப்பாக மாறிவிட்டால், அது ஊரையே கொளுத்தி விடும். ஒருவரது பிடிவாதத்தால் ஒரு நாடு அழிந்துபோன விபரீதம் நடந்திருக்கிறது.

அறியாமையில் மட்டுமே பிடிவாதம் பிடிப்பார்கள் என்று அர்த்தமில்லை. உலகப்பெரும் விஞ்ஞானி என்று கருதப்படும் தாமஸ் ஆல்வா எடிசனும் இந்த பிடிவாதம் காரணமாக அறிவியல் உலகில் அவமானம் சந்தித்தார்.

டைரக்ட் கரன்ட் எனப்படும் டிசி பயன் படுத்துவதே பாதுகாப்பானது என்று எடிசன் நம்பினார். நிகோலா டெஸ்லா உள்ளிட்ட பல விஞ்ஞானிகள் ஆல்டர்நேடிங் கரன்ட் எனப்படும் ஏசி முறையே பாதுகாப்பானது என்று நிரூபித்துக் காட்டினார்கள். அதன் பிறகும் எடிசன் டிசி முறையை ஆதரித்து விளம்பரம் கொடுத்தது மட்டுமின்றி, தான் சொன்னதை சரி என்று நிரூபிக்க அநாகரிகமாகவும் எதிரிகளை தாக்கத் தொடங்கினார். அவரது பிடிவாதமே அவருடைய அறிவியல் அறிவை கேலிக்குரியதாக மாற்றியது.

அதேபோல், மன உறுதியுடன் வீரர்கள் போர் செய்தால் எந்த போரையும் வென்று விடலாம் என்ற கருத்தில் பிடிவாதமாக இருந்தார் ஹிட்லர். ஒரு சில இடங்களில் பின்வாங்குவது போர்த்தந்திரம் என்று அவரது படைத்தளபதிகள், சொன்னதை ஹிட்லர் ஏற்கவே இல்லை. அதனால் மாபெரும் தோல்வியைத் தழுவினார். அவரது பிடிவாதம் ஒரு நாட்டின் தோல்விக்கும் ஏராளமான உயிர்கள் இழப்புக்கும் காரணமாகிப் போனது.

பிடிவாத எண்ணம் கொண்டவர்கள் அத்தனை சீக்கிரம் தங்கள் எண்ணத்தை, நம்பிக்கையை அல்லது முடிவை மாற்றிக் கொள்ள மாட்டார்கள். அவர் சொல்வது தவறு என்று ஆதாரம் காட்டினாலும், தரவுகள் கொடுத்தாலும் அதை நம்ப மாட்டார்கள்” என்றார்.

**‘’பிடிவாத குணம் ஆணுக்கு அதிகமா, பெண்ணுக்கு அதிகமா?” மகேந்திரன் கேள்வி கேட்டார்.**

‘’பொதுவாக மிகவும் கட்டுப்பாடுகளுடன் வளர்க்கப்பட்டவர்களும், அதீத செல்லம் கொடுத்து வளர்க்கப்படுபவர்களும் பிடிவாத குணத்துடன் இருக்கிறார்கள். தங்கள் வாழ்க்கையில் தனித்துவம் வேண்டும் என்று நினைப்பவர்கள் பிடிவாத குணத்தைப் பிடித்துக்கொள்கிறார்கள்.






www.gyaanaguru.com

# பிடிவாத குணம்

## ஆணுக்கு அதிகமா, பெண்ணுக்கு அதிகமா?

"பிடிவாதம் பிடிப்பவர்களுக்கு நேரடியாக உண்மையைச் சொன்னால் புரியவே புரியாது. எனவே, அவருக்குப் புரியும் வகையில் கதையாக அல்லது மூன்றாம் மனிதர்கள் மூலம் புரிய வைக்க முயற்சி செய்யலாம். அவ்வளவுதான். பிடிவாதக்கார மனிதர்களிடம் இருந்து விலகி நில்லுங்கள், அந்த குணம் உங்களுக்கும் வந்துவிடலாம்.."

இதில் ஆண்களின் பிடிவாதம் வெளிப்படையாகத் தெரிகிறது. பெண்களுடைய பிடிவாதம் அமைதியான எதிர்ப்பாக அமைகிறது.

அதேநேரம் ஆண்களின் பிடிவாதம் ஒரு வகையில் அவரது குணத்தைக் காட்டுவதாகவும், அவர் அப்படித்தான் என்றும், நேர்மையான குணம் என்றும் கருதப்படுகிறது. அதேநேரம், ஒரு பெண் பிடிவாதம் காட்டினால், அது திமிர் என்றும் இரக்கமில்லாத குணம் என்றும் குற்றம் சுமத்தப்படுகிறது. அதனாலே தங்கள் பிடிவாதத்தைப் பெண்கள் அமைதிப் போராட்டமாக நடத்துகிறார்கள். பேசாமல் இருப்பார்கள். கண்ணீர் வடிப்பார்கள். சத்தமில்லாமல் யுத்தம் நடத்துவார்கள். இது, ஆணின் பிடிவாதத்தை விட மோசமானது.

நிறைய பேர் தங்கள் வாழ்க்கை சம்பவங்களின் அடிப்படையில் சில முடிவுகளில் பிடிவாதம் காட்டுவார்கள். எங்காவது ஒரு பஸ் ஸ்டாண்ட் உணவகத்தில் அதிக விலை கொடுத்து, மோசமான உணவு சாப்பிட்டு ஏமாற்றம் அடைந்திருப்பார். ஆன்லைன் பொருள் வாங்கி ஏமாந்திருப்பார். அந்த அனுபவத்தின் அடிப்படையில், பஸ் ஸ்டாண்டில் உள்ள அத்தனை உணவகமும் மோசம், ஆன்லைன் சேல்ஸ் எல்லாமே சீட்டிங் என்று உறுதியாக இருப்பார். இந்த விஷயத்தில் யார், என்ன கருத்து சொன்னாலும் அவரது எண்ணத்தை எளிதில் மாற்றிக்கொள்ளவே மாட்டார்…" என்றார் ஞானகுரு.

**''பிடிவாதம் உறவுகளுக்குள் எப்படிப்பட்ட விளைவுகளை ஏற்படுத்துகிறது…"**

''வெளியே பிக்னிக் போனாலும் ஹோட்டலில் உணவு சாப்பிடக்கூடாது, இரவு 10 மணிக்கு படுத்து தூங்கவேண்டும் என்று சிலர் கட்டுப்பாடுடன் இருப்பார்கள். ஆரோக்கியத்திற்கும் கட்டப்பாடான வாழ்க்கைக்கும் இது ரொம்பவே நல்லது. அதேநேரம், இந்த விஷயத்தில் எல்லா நேரமும் எல்லா இடங்களிலும் பிடிவாதம் பிடிப்பது கடும் சர்ச்சையை ஏற்படுத்திவிடும். ஒரு சில நேரங்களில், ஒரு சில நபர்களிடம் இதை மாற்றிக்கொள்வதே சரியான செயல்.

அதேநேரம் அன்பு, பாசம், அக்கறை, ஆரோக்கியம் என்று ஏதேனும் காரணம் சொல்லி பிடிவாதம் பிடிக்கும் ஆண்களின் கட்டளைகளை பெண்கள் பெரும்பாலும்



ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், பிடிவாதம் பிடிக்கும் பெண்ணை ஆண்களால் அத்தனை எளிதாக ஏற்றுக் கொள்ள முடிவதில்லை. தலைமுடியை விரித்துப் போட்டு வருவேன், ரெடிமேட் ஆடை உடுத்து வேன் என்றெல்லாம் பெண் பேசுவதை அவளுடைய தனிப்பட்ட விருப்பமாக ஆண் மதிப்பதில்லை. தலையை விரித்துப்போடுவது அபசகுனம், ரெடிமேட் ஆடைகள் தரமில்லாதவை என்பது போன்ற கருத்துத் திணிப்புகளால் சண்டை அதிகரிக்கிறது.

சின்னச்சின்ன விஷயங்களில் சமரசம் செய்து கொள்ளத் தயாரில்லாத பெண் தன் கருத்தில் விடாப்பிடியாக இருக்கிறாள். இப்படி பிடிவாதம் பிடிக்கும் பெண், எல்லாவற்றையும் விட்டு கொடுக்கத் தயாரில்லாத பெண் வாழ்க்கை முழுவதும் சண்டை போட்டுக்கொண்டே இருக்கிறாள். அதனாலே, பெரும்பாலான வீடுகளில் தினமும் சண்டை நடந்துகொண்டே இருக்கின்றன…" என்றார் ஞானகுரு

**"பிடிவாதத்தைப் போக்கும் வழிகள் என்ன..?"**

"தன்னுடைய விருப்பம், தன்னுடைய செயல் மீது ஒருவர் பிடிவாதம் பிடிப்பது தவறு இல்லை. அடுத்தவர் மீது தனது விருப்பத்தைத் திணிப்பதே சிக்கலாகிறது. குடும்பத்தில் எல்லோரும் தான் சொல்வதை மட்டுமே கேட்க வேண்டும் என்று ஆணித்தரமாக நிற்பது சிக்கலாகிறது.

தனது திருமண வாழ்க்கையை வெற்றிகரமாக வாழ விரும்பும் பெண்ணும் ஆணும் தங்கள் பிடிவாதத்தை விட்டுக் கொடுத்து, தங்கள் தனித்தன்மையுடன் வாழ சரியான வழியை கண்டறிய வேண்டும். சமரசம் செய்யாத பெண்களும் ஆண்களும் வாழ்க்கையில் சரிவையே சந்திப்பார்கள்…" என்றார் ஞானகுரு.

**மந்திரச்சொல்**

கோபத்தில் இருக்கும் நியாயத்தை விட, கோபத்தில் பேசும் வார்த்தைகளே பெரிய பிரச்னைகளாக மாறுகிறது.

**"பிடிவாத குணத்தை எப்படி மாற்றுவது..?"**

''பிடிவாத குணத்தை ஆக்கபூர்வமான விஷயங்களுக்கு மட்டுமே பயன்படுத்துவது என்று உறுதி எடுத்துக்கொள்ளலாம். குறிப்பிட்ட லட்சியம் அடைவதற்கு பிடிவாதம் பிடிக்கலாம். இந்த விஷயத்தில் தோல்வி கிடைத்தாலும் கடைசி வரை முயற்சித்த திருப்தி கிடைக்கும். பொதுவாக பிறர் விஷயத்திலும் பிடிவாதம் காட்டுவதே விமர்சனத்துக்கு உள்ளாகிறது.

இதை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றால், முதலில் பிடிவாதம் என்பது ஒரு மாற்றிக்கொள்ள வேண்டிய குணம் என்பதை ஏற்க வேண்டும். எனவே, பிடிவாதக்காரர் என்று யாராவது சொன்னால், என்ன விஷயத்திற்கு பிடிவாதம் பிடிக்கிறேன், என்ன காரணத்திற்காக பிடிவாதம் பிடிக்கிறேன், இதனால் என்ன நிகழ்கிறது, யாரெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்றெல்லாம் யோசிக்க வேண்டும்.

சக மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் பரஸ்பர மதிப்பும் மரியாதையும் முக்கியம். எனவே, பிடிவாதத்தால் பிறர் உணர்வுகள் பாதிக்கப் படுகிறதா என்பதை யோசிக்க வேண்டும்.

எல்லா நேரத்திலும் நாம் நினைப்பது சரி என்ற எண்ணம் தவறு. நாம் நினைப்பதும் தவறாக இருக்கலாம் என்ற எண்ணம் வளர்த்துக் கொள்ளுங்கள். மேலும், எல்லோரும் ஒரே வழியில் நடக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை, ஒவ்வொரு நபரும் அவருக்குப் பிடித்த வழியில் நடக்கலாம். எனவே, கருத்தை சொல்லலாமே தவிர, கட்டாயப்படுத்துவது சரியல்ல…"

**''நிறைய பேர் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்பதில் உறுதியாக இருக்கிறார்களே..?"**

"அப்படிப்பட்ட நபர்களை திருத்த நினைப்பது எளிதல்ல. பெரும்பாலோர் அவர்களே அடிபட்டு அதன்பிறகே புரிந்துகொள்வார்கள். பிடிவாதம் பிடிப்பவர்களுக்கு நேரடியாக உண்மையைச் சொன்னால் புரியவே புரியாது. எனவே, அவருக்குப் புரியும் வகையில் கதையாக அல்லது மூன்றாம் மனிதர்கள் மூலம் புரிய வைக்க முயற்சி செய்யலாம். அவ்வளவுதான். பிடிவாதக்கார மனிதர்களிடம் இருந்து விலகி நில்லுங்கள், அந்த குணம் உங்களுக்கும் வந்துவிடலாம்.." என்று சிரித்தார் ஞானகுரு.


www.gyaanaguru.com

# கவலையை மறக்க நாகேஷ் போதும்

சினிமாவில் சொல்லப்பட்ட ஒரு சில வசனங்கள் காலத்தைத் தாண்டி நின்று நம்பிக்கை தரும். அதில் ஒன்று நாகேஷ் சொன்ன கவலை தத்துவம்.

கவலை இல்லாத மனிதர்கள் யாருமே இல்லை. பிச்சைக்காரர் தொடங்கி சுந்தர் பிச்சை வரை கவலை இருக்கத்தான் செய்யும். அந்த கவலையை ஒவ்வொரு மனிதரும் எப்படி அணுகுகிறார்கள் என்பதைப் பொறுத்தே அவர்கள் வாழ்க்கை அமைகிறது.

பொதுவாக எதிர்பார்ப்புகள் இல்லாத மனிதருக்கு கவலை இருப்பதில்லை. அதாவது, மனிதருக்கு கவலை களை உருவாக்குவதே எதிர்பார்ப்புகள்தான்.

இந்த உலகில் எல்லோரும் சந்தோஷமாக இருக்கும் போது, எனக்கு மட்டும்தான் கவலையும் துன்பமும் அதிகம் நிகழ்கிறது என்றே பலரும் நினைக்கிறார்கள். தனக்கு மட்டுமே அதிக துன்பம் என்று நினைக்கிறார்கள்.

இப்படி நீங்களும் நினைக்கிறீர்களா..? கவலையை விடுங்கள். உலகில் உள்ள அத்தனை மனிதர்களும் இப்படித்தான் நினைக்கிறார்கள். சந்தோஷமாக இருப்பதாக நீங்கள் நினைக்கும் அத்தனை நபர்களும் ஏதோ ஒரு கவலையுடனே வாழ்கிறார்கள்.

ஆனந்தமாக இருப்பவர்களும் கவலைப்படுவதுண்டு. அதாவது, ‘வாழ்க்கை இறுதி வரையிலும் இதேபோன்று மகிழ்வுடன் நிலைக்க வேண்டுமே’ என்று கவலைப் படுகிறார்கள். துன்பத்தில் இருப்பவர்கள், ‘வாழ்க்கை இப்படியே இருந்து விடுமோ’ என்று கவலைப்படுகிறார்கள்.





www.gyaanaguru.com

## கவலையை மறக்க நாகேஷ் போதும்

ஒருசிலர் எனக்கு ஒரு கவலையும் இல்லையே என்றுகூட கவலைப்படுவார்கள்.

கவலை என்பது மேகங்களைப் போன்றது. மேகத்துக்குப் பின் சூரியனோ, நிலவோ பெரும் வெளிச்சத்துடன் இருக்கிறது என்பது உண்மை. காற்றடித்தால் மேகம் விலகிவிடும் என்பதால், மேகத்துக்காக அதிகம் கவலைப்படுவதில் அர்த்தம் இல்லை.

கவலை என்பது நாம் உண்ணும் உணவிற்குச் சமமானது. சில சமயம் உணவில் உப்பு அல்லது காரம் அதிகமாக இருக்கலாம். அதற்காக உணவு சாப்பிடுவதை நாம் கைவிட முடியாது. அவ்வாறே, வாழ்க்கையில் கவலை என்பது வரத்தான் செய்யும், அதனை தாங்கிக்கொள்ளும் அல்லது தாண்டிச்செல்லும் மனப்பக்குவம் வேண்டும்.

கவலையைப் பற்றி நாகேஷ் திரைப்படத்தில் சொல்லும் வசனம் நூற்றுக்கு நூறு உண்மை. கவலை என்பது சிறிய கல்லைப் போன்றது. அதனை கண்ணுக்கு அருகே வைத்து பார்த்தால் ஆகாயத்தையே மறைத்துவிடும். கொஞ்சம் தள்ளிவைத்துப் பார்த்தால், அந்த கல் ஆகாயத்தை ஒப்பிடும்போது எத்தனை சிறியது என்பது தெரியும். ஆகவே, கவலையை நாம் மனதிற்குள் போட்டு சுமந்துகொண்டே இருக்கத் தேவையில்லை.

கவலைப்படுவதால் எதுவும் மாறிவிடப் போவதில்லை. குடும்பத் தலைவன் இறந்துவிட்டாரே என்று கவலைப்படுவதால், அவர் திரும்பிவரப் போவதில்லை. அதேபோன்று நடக்காத ஒன்றுக்காக கவலைப்படுவதிலும் அர்த்தம் இல்லை. விபத்து நடக்குமோ, தொழில் நஷ்டம் அடைந்துவிடுமோ, தேர்வில் தோல்வி கிடைக்குமோ என்றெல்லாம் நடக்காத விஷயங்களுக்கு கவலைப்படுவதிலும் அர்த்தமே இல்லை என்ற உண்மை புரிய வேண்டும்.

தகுதிக்கு மீறி ஆசைப்படுவதும், சாத்திய மற்றவைகளை அடைய முற்படுவதும் கவலைக்கான முக்கிய காரணிகள். ஆகவே, கிடைக்காத ஒன்றுக்காக கவலைப்படுவதில் அர்த்தமே இல்லை.

நாகேஷின் தத்துவம் என்று தொடங்கிவிட்டு, அவரது இன்னொரு தத்துவத்தை சொல்லாமல் போக முடியாது.

நியாயமாக உங்களுக்கு வரவேண்டிய நல்ல பெயர் மற்றவர்களுக்குச் செல்லும் போது உங்களுக்கு எப்படி இருக்கும் என்று நாகேஷிடம் கேட்கப்பட்டது.

அப்போது அவர், "நான் கவலையே படமாட்டேன் சார். ஒரு கட்டடம் கட்டும் போது, சவுக்கு மரத்தை முக்கியமா வச்சு சாரம் கட்டி, குறுக்குப் பலகைகள் போட்டு, அதன் மேல பல சித்தாள்கள் நின்னு, கைக்குக் கை கல் மாறி கட்டடம் உயர்ந்து கொண்டே போய் அது முடிந்த பிறகு, அந்தக் கட்டிடத்துக்கு வர்ண ஜால வித்தைகள் எல்லாம் அடிச்சு, கீழ இறங்கும் போது ஒவ்வொரு சவுக்கு மரமாக அவிழ்த்துக் கொண்டே வருவார்கள்.

கட்டடம் முடிந்து,கிரஹப் பிரவேசத்தன்று கட்டடம் கட்டுவதற்கு எது முக்கிய காரணமாக இருந்ததோ, அந்தச் சவுக்கு மரத்தை யார் கண்ணிலும் படாமல் பின்னால், எங்கயோ மறைத்து வைத்துவிட்டு, வேறெங்கேயோ வளர்ந்த வாழை மரத்தை முன்னால் நட்டு கிரஹப் பிரவேசம் நடத்தி அனைவரையும் வரவேற்பார்கள். அத்தனை பெருமையும் வாழை மரத்துக்குப் போய் விடும்.

இதில் உள்ள உண்மை என்ன தெரியுமா?

அந்த வாழை மரம் மூன்று நாள் வாழ்க்கை தான் வாழும். ஆடுமாடுகள் மேயும்.

குழந்தைகள் பிய்த்தெடுப்பார்கள். பிறகு குப்பை வண்டியிலே போய்ச் சேரும். எங்கோ மூலையில் மறைந்து கிடக்கிறதே அந்தச் சவுக்கு மரம் கண்ணீர் விடுவதில்லை. அடுத்த கட்டடம் கட்டுவதற்கு ஏணியாக தயார் நிலையில் என்றைக்கும் சிரித்துக் கொண்டேயிருக்கும்.!.

நான் வாழை அல்ல...! சவுக்குமரம்...!" என்று கூறினாராம்.

சிரிப்பதற்கு மட்டுமல்ல, கவலையை மறக்கவும் நாகேஷ் போதும்.

கவலை வரும் நேரத்தில் உங்களுக்கு நெருக்கமான நட்பு, உறவுகளிடம் மனம் விட்டுப் பேசுங்கள். கவலைகளைப் பகிர்ந்துகொண்டால், நிச்சயம் சுமை குறையும். பகிரப்படாத கவலை மன அழுத்தத்தை உருவாக்கிவிடும்.

அடுத்தது, எந்த ஒரு கவலைக்கும் முடிவு உண்டு என்று நம்புங்கள். சாவி இல்லாமல் பூட்டுகள் தயாரிக்கப்படுவதில்லை என்ற நம்பிக்கையுடன் கவலையை அணுகுங்கள். கவலை காணாமல் போய்விடும்.



www.gyaanaguru.com
www.gyaanaguru.com



# கடவுள் இறந்துவிட்டான்

பைத்தியக்கார தத்துவஞானி என்றே ஜெர்மனைச் சேர்ந்த தத்துவஞானி ஃபிரெட்ரிக் நீட்சேவை (Friedrich Nietzsche) குறிப்பிடுகிறார்கள். ஏனென்றால் மனிதர்கள் மீதும் மனிதம் மீதும் திணிக்கப்பட்டிருந்த அத்தனை கருத்துக்களையும் தகர்த்தெறிந்து, ஆதிமனிதராக மாறுவதற்கு வழி காட்டினார். உலகில் நடப்பவைகளெல்லாம் அதிமனிதன் வரவுக்காக என்கிறார் நீட்சே.

தத்துவ அறிஞர்களில் முக்கியமான ஒருவராக கருதப்படும் பிரெட்ரிக் நீட்சே, 1844-ம் ஆண்டு ஜெர்மனியில் பிறந்தார். இலக்கியம், மொழியியல், வரலாறு ஆகிய துறைகளில் கற்றுத் தேர்ந்தவர். பண்பாட்டு விமர்சனம், வரலாறு குறித்து பல ஆய்வுகளை மேற்கொண்டவர். மேலும் கவிதை, இசை போன்றவற்றிலும் நாட்டம் கொண்டவர்.

நீட்சே சிறுவனாய் இருந்தபோதே தந்தையை பறிகொடுத்தார்.நீட்சேவின் தாய் அவரை பாதிரியாராக்குவதற்கு விரும்பினார். ஆனால், கல்வியில் சிறந்து விளங்கிய நீட்சேவுக்கு தத்துவவியல் மீது ஆர்வம் அதிகம். எனவே அதில் மூழ்கினார்.

இயற்கையின் விதிகளைத் தவிர்த்து கடவுளின் இருப்பை ஏற்றுக்கொள்ளாதவர் நீட்சே. சூரியன் மேற்கில் உதிக்கட்டும் நான் ஆலயத்துக்குள் காலடி எடுத்து வைக்கிறேன் என்றார்.





## பைத்தியக்கார தத்துவஞானி நீட்சே

# பைத்தியக்கார தத்துவஞானி நீட்சே

நீட்சே மதங்களையும் கடவுளையும் ஒருசேர எதிர்த்து நின்றார். அவர், ''வாழ்க்கையை நீ மட்டும் தனியே எதிர்கொள்ளப் போவதில்லை கடவுள் இருக்கிறார் என்கிறது மதம். இது, மனிதனுக்கு வசதியாகப் போய்விட்டது. எல்லா வற்றையும் கடவுள் பார்த்துக்கொள்வார் என்று பாரத்தை இறக்கிவைக்க முடிகிறது. இதற்காகவே மனிதனுக்கு கடவுள் தேவைப்படுகிறார்.

விதிப்படிதான் நடக்குமென்றால் எதிர்காலத்தை துல்லியமாக கணிக்க முடிந்திருக்க வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அறிவியல் உண்மைகளை முனை மழுங்கச் செய்திருப்பதும் மதம் தான். இன்றும் ஜோதிடத்தில் சூரியனை கோள் என்கிறார்கள்.

கிறிஸ்துவுக்கு முன்னூறு ஆண்டுகள் முன்பே அரிஸ்டார்கஸ் என்ற அறிஞர் சூரியனை மையப் படுத்தியே பூமி உட்பட கோள்கள் சுழலுகின்றன என்ற கோட்பாட்டை வெளியிட்டார். அதை திருச்சபை ஏற்றுக் கொள்வதற்கு எத்தனை நூற்றாண்டுகளானது தெரியுமா? கடவுள் ஆறு நாட்கள் உலகைப் படைத்தார் ஏழாம் நாள் ஓய்வு எடுத்துக் கொண்டார் என்றால் அதற்கு பிறகு என்ன செய்தார்..?

உலகத்தைப் பேணிக் காத்தார் என்கிறார்கள் கடவுள் நம்பிக்கையாளர்கள். அதுசரி, உலகைப் படைப்பதற்கு முன்பு கடவுள் என்ன செய்து கொண்டிருந்தார்?. கடவுள் தனிமையை வெறுத்தார் என்றால் ஒரு பெண்ணைப் படைத்திருக்கலாம். ஏதோ வீட்டுக் கொல்லையில் கத்திரிக்காய் விதைப் பதை போல உலகைப் படைத்தார் என்றால் ஏற்றுக் கொள்ள முடிகிறதா?

ஒன்றுமில்லாததிலிருந்து உலகம் வந்தது. பெரு வெடிப்புக்குப் (Big bang) பிறகுதான் காலமே தோன்றி இருக்க வேண்டும். இழப்பதோ அடைவதோ அல்ல காலம் ஒன்றி லிருந்து மேலான மற்றொன்றுக்கு கடந்து செல்வதே அது. சூரியனைப் போன்றே பல கோடி நட்சத்திரங்கள் பேரண்டத்தில் உள்ளன. எத்தனையோ சூரிய குடும்பங்கள் இருப்பதாக கோட்பாடுகூட முன்வைக்கப்படுகிறது.

கோள்கள் எவ்வாறு ஒன்றையொன்று ஈர்க்கின்றனவோ அவ்வாறே ஒன்றையொன்று விலக்கவும் செய்கின்றன. இதனால் அண்டம் விரிவடைந்து கொண்டே செல்கிறது.

காலமற்றதுக்கு செல்வதென்பது மனித இனத்துக்கே வைக்கும் முற்றுப்புள்ளி. நீர் ஆவியாவதும் சூரியன் உதிப்பதும் யாருடைய கட்டளைகளையும் கேட்டு நடைபெறும் காரியமல்ல. பேரண்டத்தின் நிகழ்வை மாற்றியமைக்கக்கூடிய சக்தி கடவுள் என்றால் அதற்கு நூறு விழுக்காடு சாத்தியமில்லை.

இயற்கையான நிகழ்வுகளில் தலை நுழைக்கக்கூடிய சக்தி வெறும் கற்பனாவாதமே தவிர நிரூபணம் செய்ய முடியாது...'' என்றார். நீட்சேவின் ஆதிமனித கோட்பாடு கடவுளை நிராகரித்தது.



புத்தரின் சூன்யவாதம் நீட்சேவுக்கு ஏற்கத்தக்கதாக இருந்தது. அதாவது சூன்யத்திலிருந்து வெளி வந்து திரும்பவும் சூன்யத்துக்குள்ளே புகுவது. இறப்புக்கு பிறகான வாழ்க்கை இல்லை. உடல் மண்ணுக்கு எருவாகப் போவதைவிட வேறு வழி இல்லை. ஆத்மா என்பதெல்லாம் வெறும் கனவு.

எத்தனையோ பேரரசர்களும், பேரழகிகளும் மண்ணுக்கு எருவாய்த்தான் போனார்கள். இன்று கோவில்களில் கூட்டம் குவிகிறதென்றால் அதற்கு மரண பயமே மூலகாரணம். நீட்சே சொல்லும் ஆதிமனிதன் பரிணாம வளர்ச்சியால் மனிதன் அடையும் நிலையாகக் கூட இருக்கலாம். வாழ்க்கை நீட்சேவின் வேர்களை ஆட்டிப்பார்த்தும் அவர் இறைமறுப்பு கொள்கையை கைவிடவில்லை.

கடவுளுக்கு இங்கு என்ன வேலை? இயற்கையின் வெல்லப்பட முடியாத விதி கடவுளை நிராகரிக்கின்றது.

மனிதனுக்கு ஆயுட்காலம் அறுபது ஆண்டு கள் என்றால் அவனால் உருவாக்கப்பட்ட கடவுள் பன்னெடுங்கால் பிரபஞ்சத்தை ஆளுகிறார் என்ற கருத்தை எப்படி அவர்கள் முன்வைக்க முடியும் என்று நீட்சே கேள்வி எழுப்பினார்.

எதிர்ப்பிலேயே வாழுங்கள், விதை முதற்கொண்டு எல்லா உலக ஜீவராசிகளும் எதிர்ப்பிலேயே தான் வாழுகின்றன. கடவுள் எல்லையற்ற சுதந்திரம் உடையவர் என்றால் அவரால் விதியின் மீது கை வைக்க முடியும் என்றாகிறது. அவரால் அப்படி குறுக்கிட முடிந்தால் அது விதியாகவே இருக்க முடியாது.

நீட்சேவின் கேள்விகளுக்கு புனித நூல்களில் பதில் இல்லை. மதத்தின் மீது அபிமானம் கொண்டவர்கள் கிளிப்பிள்ளைகளாகத்தான் இருந்தார்கள். அவர்கள் சுயஅறிவை அடகு வைத்தவர்கள். நான் தான் கடவுள் என்று பிரகடனப்படுத்திக் கொண்டவர்கள் பின்னால் மக்கள் அணிதிரள ஆரம்பித்தார்கள். வாழ்க்கை அர்த்தமிழந்தது. ஜனத்தொகை பெருகுவது போல கடவுளர்களின் எண்ணிக்கையும் பெருக ஆரம்பித்தது.

மக்கள் தாங்கள் ஏமாற்றப்படுகிறோம் என்று தெரிந்தும் எதிர்க்க முன்வரவில்லை. மேலும் மேலும் தாங்கள் பின்னிய வலையிலேயே சிக்கிக் கொண்டனர்.

ஒருவன் கீழ்மைகளிலிருந்து முயற்சி செய்து முன்னேறி மேலே வருவதற்கு கடவுள் தேவையில்லை நன்கு உழைத்தாலே போதும். புனித நூலில் சொல்லப்பட்டு இருப்பதற்காக விசுவாசிக்க வேண்டாம் பகுத்தறிவால் ஆராய்ந்து பார்த்தாலேயானால் மதம் உன் கைகளில் விலங்கிட்டு இருப்பதை அறியலாம்.

நீட்சேவின் மிகப்பிரபலமான கூற்றில் ஒன்று "Gott ist tot" - "கடவுள் இறந்துவிட்டான்". இது ஒரு பிரச்சனையாக மதத்தை ஒழிக்கக் கூறும் நாத்திக நிலைமையல்ல. மாறாக, மேற்கத்திய சமுதாயத்தின் மதக் கொள்கைகளின் வீழ்ச்சி.

இது நீட்சேவின் பார்வையில் ஒரு மாபெரும் வெறுமைத் தருணம்: மனிதன் இனி ஒழுக்கத்திற்கும் அர்த்தத்திற்கும் கடவுளை அடிப்படையாக வைத்திருக்க முடியாது. புதிய அர்த்தங்களை மனிதனே உருவாக்க வேண்டிய கட்டாயம் உருவாகிறது.

நீட்சேவின் தத்துவத்தில் முக்கியக் கருத்து உன்னத மனிதன். இது சாதாரண மனிதனின் எல்லைகளைத் தாண்டி, தானாகவே அர்த்தங்களை உருவாக்கும், வாழ்வின் முழுமையை ஏற்கும், சக்தி, சுதந்திரம், மற்றும் ஆனந்தத்தின் பிரதிநிதியாக விளங்கும் மனிதனை குறிக்கிறது.

நீட்சே ஒரு நவீன உலகத்தின் குரல். சிந்திக்க வைக்கிறார். அவருடைய சிந்தனைகள் எப்போதும் எளிமையானதல்ல. ஆனால் அவை வாழ்க்கையை மாற்றும் சக்தி கொண்டவை.

இத்தனை தீவிரமாகப் பேசியவரை மனநலம் குன்றியவர் என்றார்கள். அவருடைய புத்தகங்கள் பெரிதும் பாராட்டப்படவில்லை. சிலர் அவரை "பைத்தியக்கார தத்துவஞானி" என்றும் விமர்சித்தனர். ஆனால், மரணத்துக்குப் பிறகு தத்துவம், உளவியல், இலக்கியம், கலை, மற்றும் அரசியல் துறைகளில் அவரது தாக்கத்துக்கு முக்கியத்துவம் கிடைத்தது.

மனிதர்கள் செய்யும் மூன்று முக்கியமான தவறுகளை நீட்சே சுட்டிக்காட்டினார்.

## பிஸியான பணி

அதிக வேலைப்பளுவில் மூழ்கி இருக்கும் மனிதன் தன்னைத்தானே மறந்து விடுகிறான் என்கிறார் நீட்சே.

www.gyaanaguru.com

www.gyaanaguru.com

இதையே பிஸியான வாழ்க்கை என்று மனிதர்கள் பெருமைப்படுகிறார்கள். உண்மையில், பிஸியான வாழ்க்கை தனிப்பட்ட மனித சிந்தனைகளுக்கு இடமளிக்காது. கனவுகள், இலக்குகள் எல்லாவற்றையும் பின்னே தள்ளி மனிதரை இயந்திரமாக்கிவிடும். நாம் யார்? எதற்காக வாழ்கிறோம்? என்ற கேள்விக்குப் பதில் தேடுவதற்கு யாருக்கும் நேரமில்லை.

### மேலோட்டமான மனநிலை

எதையும் முழுமையாகவும் தெளிவாகவும் அறிந்துகொள்ளும் அக்கறையும் ஆர்வமும் இல்லாத மனிதர்களே அதிகம். எல்லாமே மேலோட்டமாகத் தெரிந்து கொண்டால் போதும் என்று நினைக்கிறார்கள். எதையும் ஆழமாக அறிந்து கொள்ளாமல், நிபுணத்துவம் இல்லாமல் எல்லாம் தெரிந்தது போன்று செயல்படும் நிலை.

### எல்லோருக்கும் இரக்கம் காட்டுதல்

நல்லவர், கெட்டவர், நன்மை, தீமை, தேவை, தேவையில்லாதது என்று பிரித்துப் பார்க்காமல் எல்லோரிடமும் தேவைக்கு அதிகம் இரக்கம் காட்டுவது வாழ்க்கையை சிக்கலாக்கிவிடுகிறது. ஏனெனில் இந்த உலகம் ஒன்றையொன்று கொன்று தின்னும் வகையில் அமைந்திருக்கிறது. எனவே, தேவையற்ற இரக்கம் மனிதன் செய்யும் மிகப்பெரும் தவறு என்கிறார்.

## நீட்சேவின் சில அற்புத மொழிகள்.

- உங்கள் எதிரிகளை நேசியுங்கள், ஏனெனில் அவர்கள் உங்களில் உள்ள சிறந்ததை வெளிக்கொண்டுவருகிறார்கள்.
- இந்த உலகில் இரண்டு வகையான மக்கள் உள்ளனர், தெரிந்து கொள்ள விரும்புபவர்கள் மற்றும் நம்ப விரும்புபவர்கள்.
- நான் இருளில் இருந்தேன், ஆனால் நான் மூன்று அடிகள் எடுத்துவைத்ததில் சொர்க்கத்தில் என்னைக் கண்டேன். முதல் அடி ஒரு நல்ல சிந்தனை, இரண்டாவது ஒரு நல்ல வார்த்தை, மூன்றாவது ஒரு நல்ல செயல்.

## மந்திரச்சொல்

உச்சபட்ச அறிவு என்பது எதுவும் தெரியாது என்பதை உண்மையாக ஒப்புக்கொள்வது.

- சில நேரங்களில் மக்கள் உண்மையைக் கேட்க விரும்புவதில்லை. ஏனெனில் தங்கள் மாயைகள் அழிக்கப் படுவதை அவர்கள் விரும்புவதில்லை.
- நமக்கு முன் இருக்கும் பாதையில் எப்பொழுதும் கற்கள் இருக்கும். அவை தடைக்கற்களா அல்லது படிக்கற்களா என்பது நீங்கள் அவற்றை எவ்வாறு பயன்படுத்துகிறீர்கள் என்பதைப் பொறுத்தது.
- நீங்கள் பொய் சொன்னதில் எனக்கு வருத்தம் இல்லை, இனிமேல் என்னால் உங்களை நம்ப முடியாது என்றுதான் எனக்கு வருத்தம்.
- ஒரு இளைஞனை கெடுப்பதற்கான உறுதியான வழி, வித்தியாசமாக சிந்திப்பவர்களை விட ஒரே மாதிரியாக சிந்திப்பவர்களை உயர்வாக மதிக்கும்படி அறிவுறுத்துவதாகும்.
- இந்த உலகம் அழகானது, ஆனால் அதற்கு மனிதன் என்று ஒரு நோய் உள்ளது.
- மகிழ்ச்சியற்ற திருமணங்களை உருவாக்குவது அன்பின் பற்றாக்குறை அல்ல, ஆனால் நட்பின் பற்றாக்குறை.
- சிறந்த விஷயங்கள் அனைத்தும் முதலில் சாத்தியமற்றதாகவே தோன்றும்.
- ஒருவர் தான் தேடியதைக் கண்டுபிடிக்கும் போது, எந்தப் பயணமும் சிறந்ததல்ல.
- எல்லா நேரத்திலும் தான் புகழப்பட வேண்டும் என்று விரும்பும் கடவுளை என்னால் நம்ப முடியாது.
- ஒரு எதிரிக்கு எதிரான சிறந்த ஆயுதம் மற்றொரு எதிரி.
- பழி வாங்குவதிலும் காதலிலும், ஆணை விட பெண் அதிக காட்டுமிராண்டித் தனம் உடையவள்.

www.gyaanaguru.com




# 1 ஓர் ஆண்டு சந்தா 500 ரூபாய் செலுத்திவிட்டீர்களா..?

மனதுக்கு சந்தோஷம் தரும் **ஞானகுரு மகிழ்ச்சி,** உடலுக்கு ஆரோக்கியம் தரும் **ஞானகுரு யாக்கை** மின்னிதழ்களைப் பெறுவதற்கு ஆண்டு சந்தா ரூ.500 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட வங்கி எண் அல்லது மொபைல் எண்ணுக்கு சந்தா அனுப்பி ஆதரவு வழங்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.




செல்போன் : 7299753999

வங்கிக் கணக்கு: GYANAGURU PUBLICATION, UNION BANK OF INDIA, IFS CODE : UBIN0554847, Current Accout No. 548401010050639




க்யூஆர் கோடு மூலம் அனுப்பலாம். பணம் அனுப்பியதற்கான ஆதாரத்துடன் தங்களுடைய வாட்ஸ் ஆப் எண் அல்லது இமெயில் முகவரியை மேற்கண்ட செல்போனுக்கு அனுப்பிவையுங்கள். இதழ் தொடர்ந்து அனுப்பப்படும்.


www.gyaanaguru.com



# துன்பத்திற்கு ஒரு டீ சாப்பிடுங்கள்.

துன்பம், துயரம், கவலையால் பாதிக்கப்படாத மனிதர்கள் யாருமே இல்லை. பொதுவாக துன்பம், தோல்வி போன்றை மூன்று வழிகளில் வருகிறது. அதாவது நம்முடைய செயல், பிறரது செயல் மற்றும் இயற்கை.

நமது செயல், பிறரது செயலால் எல்லோரும் துன்பம், தோல்வி அடைந்திருப்பார்கள். இயற்கையும் அப்படி சதி செய்வதுண்டு. குடும்பத்தோடு மகிழ்ச்சியாக விடுமுறையைக் கொண்டாட ஊட்டி செல்கிறீர்கள். கடும் மழையால் போக்குவரத்து நெரிசலில் சிக்கி, அறையை விட்டு வெளியே எங்கேயும் சுற்றிப்பார்க்கச் செல்ல முடியாமல், ஊர் திரும்பினால் போதும் என்று ஒரு நிலை இயற்கையால் உருவாகலாம். கொரோனா எத்தனையோ மனிதர்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டது.

எப்படியெல்லாம் ஊட்டிக்குப் போய் கஷ்டப்பட்டோம் தெரியுமா என்று பின்னர் ஒரு நாள் சொல்லிச்சொல்லி சிரிக்கலாம் என்பது தனிக் கதை. முன்பு கஷ்டப் பட்டதை பின்னர் ஒரு நாள் எல்லோருமே சொல்லி சிரிப்பது வழக்கம் தான்.

ஆனால், துன்பம் வரும் நேரத்திலும் சிரிக்க முடியுமா..? இடுக்கண் வருங்கால் நகுக என்று வள்ளுவர் சொல்வது எப்படி சாத்தியமாகும்?

## திருவள்ளுவர்

பத்து மாதங்கள் வயிற்றில் பிள்ளையை சுமந்து, எக்கச்சக்க வேதனைக்குப் பிறகு குழந்தை பிறக்கிறது. பிரசவம் வரையிலும் கதறிக்கொண்டிருந்த பெண், உடனடியாக மகிழ்ச்சியான மனநிலைக்கு மாறுகிறாள். அவளுடைய பத்து மாதத் துன்பத்திற்குப் ஒரு பரிசு கிடைத்ததாக பூரித்துப் போகிறாள். இப்படியொரு பரிசு கிடைக்கப் போகிறது என்பது தெரிந்தே கர்ப்பத்தில் எத்தனை வேதனை கிடைத்தாலும் அதை தாங்கிக் கொண்டு சிரிக்கிறாள்.

இது போல் ஒவ்வொரு துன்பத்திற்குப் பிறகும் ஒரு இன்பம் கிடைக்கும், இந்த துன்பம் நிலையானது இல்லை என்ற உண்மையைப் புரிந்துகொண்டால், சிக்கலான தருணங்களிலும் சிரிக்க முடியும் என்பதே உண்மை.

“இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்.”

வள்ளுவரின் குறளை இப்படித்தான் பார்க்க வேண்டும். அதாவது, ஒரு செயல் செய்யும்போது இடையூறுகள் வருகிறது, சிக்கல் வருகிறது, துன்பம் நேர்கிறது என்றால் மகிழ்ச்சி அடையுங்கள். இந்த துன்பம் செயலை நல்லபடியாக செய்வதற்குத் தாண்டுகோலாக இருக்கிறது என்றும் இதனை செய்து முடித்தபிறகு மகிழ்ச்சி கிடைக்கப் போகிறது என்றும் நம்பிக்கை வையுங்கள். அதனால் துணிந்து நில்லுங்கள், தொடர்ந்து செல்லுங்கள், தோல்வி கிடையாது என்கிறார் வள்ளுவர்.

## ஜே.கே.ரௌலிங்

ஹாரி பாட்டர் புத்தகம் எழுதிய ஜே. கே.ரௌலிங் பத்துக்கும் மேற்பட்ட புத்தக வெளியீட்டாளர்களால் அவமதிக்கப் பட்டார். அவரது புத்தகம் பிரசுரம் செய்வதற்குத் தகுதியற்றது என்று வந்த கடிதங்களை இன்றும் வைத்திருக்கிறார். பங்கேற்கும் கூட்டங்களில் அந்த கடிதங்களைக் காட்டி, பழைய துன்பத்தை நகைச்சுவையுடன் பகிர்ந்துகொள்கிறார்.

சில்வெஸ்டர் ஸ்டோலன் கதையையும் நடிப்பையும் ஆரம்பத்தில் எந்த தயாரிப்பு நிறுவனமும் ஏற்கவில்லை. அவமானப்படுத்தினார்கள். இப்படி எத்தனை ஆண்டுகள் அப்படி அவமதிக்கப் பட்டேன் என்பதை இன்றும் அவர் நகைச்சுவையாக சொல்லிக் கொண்டு இருக்கிறார்.

எனவே, தோல்வி என்பது நிரந்தரம் அல்ல. அது ஒரு கசப்பு மருந்து. வெற்றி பாதையைக் காட்டும் மருந்து. எனவே, தோல்வியை எதிர்கொள்வதற்கு கற்றுக் கொண்டால் எளிதில் வெற்றி அடையலாம்.

தோல்வியை எதிர்கொள்ள வேண்டும் என்றால் தோல்வி என்றால் என்னவென்று தெளிவு வேண்டும். வெற்றிக்குச் செல்லும்



பாதையில் தோல்வி என்பது தவிர்க்க முடியாத ஒன்று. தோல்வியால் பாதிக்கப்படாதவர்கள் யாருமே இல்லை என்ற புரிதல் வேண்டும்.

தோல்வி என்பது முடிவு அல்ல, அது ஒரு புதிய தொடக்கம். யாரும் தோல்வி வருவதை விரும்பமாட்டோம். ஆனால், வெற்றி அடைந்த அனைவரும் வாழ்க்கையில் பல முறை தோல்வி அடைந்தவர்கள்தான். தோல்வி என்ன தரும் தெரியுமா..?

- எதையும் தாங்கும் சக்தியை தோல்வியே கொடுக்கிறது. இதுவே, நம்பிக்கை வரவழைக்கிறது.

- பிறர் உதவியால் யாரும் வெற்றி அடைய முடியாது. சொந்தமாக உழைத்தே முன்னேற முடியும் என்ற உண்மையை சொல்லித்தருகிறது.

- புதிய பாதையை தோல்விகளே காட்டுகின்றன. அதாவது ஒரே பாதையில் செல்லும்போது வெற்றி கிடைக்காது என்பது புரிந்தால் தான், புதிய பாதையில் முயற்சிக்க முடியும்.

- வெற்றி மகிழ்ச்சி தரலாம். ஆனால், தோல்வி மட்டுமே தைரியம் தரும். மனதை வலிமையாக்கும்.

- விதை போட்டவுடன் செடி முளைக்காது. எனவே, வெற்றிக்குக் காத்திருக்க வேண்டும் என்ற பொறுமையை தோல்வியே கற்றுக் கொடுக்கிறது.

- இந்த உலகில் எதுவுமே சும்மா கிடைக்காது. கஷ்டப்பட்டுத்தான் வெற்றியைத் தொட முடியும் என்பது தெரிந்தால்தான், அதன் தனித்தன்மை தெரியவரும். இனி, தோல்விகளை சமாளிப் பதற்கான மூன்று வழிகளைப் பார்க்கலாம்.

- தோல்வியை ஏற்றுக்கொள்ளுங்கள். தோல்வியை முழு மனதுடன் ஏற்றுக்கொள்பவர்களால் மட்டுமே அதனை ஆய்வு செய்து, செய்த தவறுகளைக் கண்டறிய முடியும். எனவே, தோல்வி, துன்பத்தை அப்படியே ஏற்றுக் கொள்வதே முதல் கட்டம். தோல்வி என்பது பாடம் கற்றுக்கொள்ள வேண்டிய பள்ளிக்கூடம். எனவே, தோல்வி ஏன் வந்தது, அது என்ன கற்றுத்தந்தது என்பதை தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும்.

- மீண்டும் மீண்டும் தோல்வி அடைந்தாலும், அதில் கிடைத்திருக்கும் முன்னேற்றத்தைக் கொண்டாடுவதற்கு கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது, பழைய தவறுகளை செய்யாமல், புதிய தவறுகள் காரணமாக தோல்வி கிடைத்திருக்கலாம். இதை ஒரு வகையில் வெற்றியாகவே கருத வேண்டும். தோல்விகள், துக்கங்களில் இருந்து வெற்றி அடைந்தவர்களின் வாழ்க்கை வரலாறுகளை திரும்பத்திரும்ப படிப்பதும், கேட்பதும், பார்ப்பதும் ஊக்கம் தருவதாக அமையும். பிறருக்குக் கிடைத்த பெரிய தோல்விகள் நம் தோல்விகளை சின்னதாகப் பார்ப்பதற்குக் கற்றுக் கொடுக்கும்.

- மீண்டும் மீண்டும் முயற்சி செய்வது மட்டுமே நமது வேலையாக இருக்க வேண்டும். வெற்றி, தோல்வி பற்றிய எதிர்பார்ப்பு தேவையே இல்லை. ஏனென்றால் வெற்றி, தோல்விக்கு நம்முடைய முயற்சி தவிர ஏகப்பட்ட காரணங்கள் உள்ளன.

- தோல்வி, துன்பம், துயரம் வரும்போது, அதை சிரிப்பினால் மறைப்பதற்குப் பழக வேண்டும். எத்தனையோ துன்பங்களைப் பார்த்துவிட்டோம், இதுவெல்லாம் நமக்கு புதுசா என்று மென்சிரிப்புடன் டீ சாப்பிட்டுப் பழகுங்கள்.

- தோல்வி, துக்கத்திற்கு சிரிப்பு என்பது மருந்தல்ல. ஆனால், அதுவே ஊக்கமும் நம்பிக்கையும் கொடுக்கும். எனவே, துன்பமும் தோல்வியும் வரும்போது சிரித்துப் பழக வேண்டும். சித்திரமும் கைப்பழக்கம் என்பது போன்று, துன்பத்தைக் கண்டு சிரிப்பதும் கொஞ்சம் கொஞ்சமாக சாத்தியமாகிவிடும்.







# சொகுசுக்குத்தானே ஆசைப்படுகிறீர்கள் கடன்காரர்களே...?



இருபது ரூபாய் கீரைக்கட்டை பதினைந்து ரூபாய்க்கு பேரம் பேசுகிறீர்கள். அந்த நேரத்தில் ஒருவர் கீரைக்கட்டுக்கு பேரம் பேசாமல் பணத்தைக் கொடுத்துவிட்டு போய்க்கொண்டே இருக்கிறார்.

அந்த தருணத்தில் உங்கள் வாழ்க்கையைப் என்ன நினைப்பீர்கள்..?

நம்மிடமும் நிறைய பணம் இருந்தால் இப்படி பேரம் பேசாமல் எல்லாவற்றையும் வாங்கலாம் என்று நினைப்பீர்களா..? உங்கள் வாழ்க்கை அவரை விட மோசமாக இருக்கிறது என்று அவமானப்படுவீர்களா..?

பக்கத்து பங்களாவில் பெரும் கோடீஸ்வரர் வாழ்கிறார். உயர் ரக கார், பார்ட்டி என்று கொண்டாட்டமாக வாழ்கிறார். திடீரென ஒரு நாள் அந்த குடும்பத்தில் அத்தனை விஷம் குடித்து மரணம் அடைந்துவிட்டதை அறிகிறீர்கள். காரணம் கடன் தொல்லை.

இந்த தருணத்தில் உங்கள் வாழ்க்கையைப் பற்றி என்ன நினைப்பீர்கள்..?

ஆடம்பரத்துக்குக் கடன் வாங்கியதால் பக்கத்து வீட்டுக்காரர் செத்துப் போனார். நல்லவேளை நாம் அதிகம் கடன் வாங்க வில்லை என்று பெருமூச்சு விடுவீர்களா அல்லது பணத்தை நன்றாக அனு பவித்து விட்டு செத்துவிட்டார் என்று நினைப்பீர்களா..?

கடன் வாங்கியாவது ஆடம்பர வாழ்வு வாழ வேண்டும் என்பதே இன்று நிறைய பேருக்கு ஆசையாக இருக்கிறது. ஆடம்பர வாழ்க்கை அமையாத ஒவ்வொரு நபரும் தங்களை ஏழையாக நினைக்கிறார்கள்.

இத்தனைக்கும் பெரும்பாலோர் வீட்டில் கிட்டத்தட்ட அனைத்து வீட்டு வசதி சாதனங் களும் இருக்கின்றன. கடன் வாங்கி வீடு வாங்குகிறார்கள். கடன் வாங்கி கார் வாங்குகிறார் கள். டி.வி., பிரிட்ஜ், வாஷிங் மெஷின் என்று கடன் வாங்கியாவது வாங்குகிறார்கள். எத்தனை இருந்தாலும், இன்னமும் தங்களிடம் நிறைவாக எதுவும் இல்லை என்றே நினைக்கிறார்கள்.

அதாவது, தங்களிடம் போதிய பணம் இல்லை என்று நினைக்கிறார்கள். நிறைய பணமிருந்தால் பிடிக்காத வேலையைச் செய்ய வேண்டாம், பிடிக்காதவர்களுடன் பழக வேண்டாம், வாழ்க்கையை நம் இஷ்டத்துக்கு அனுபவிக்கலாம் என்றே நினைக்கிறார்கள்.

அதாவது ஒரு கார் வைத்திருப்பவர், அதை விட பெரிய காருக்கு ஆசைப்படுகிறார். வீடு வைத்திருப்பவர், அதைவிட பெரிய வீட்டுக்கு ஆசைப்படுகிறார்கள். நல்ல வேலையில் இருப்பவர், அதைவிட நல்ல வேலைக்கு ஏங்குகிறார்.

எத்தனை சம்பாதித்தாலும் மூன்று வேளை மட்டுமே உணவு உண்ண முடியும். ஒரு



www.gyaanaguru.com

www.gyaanaguru.com

ஞானகுரு
மகிழ்ச்சி
டிஜிட்டல் மாத இதழ்
4 - 9

நிறுவனர்
**எஸ்.கே.முருகன்**

ஆசிரியர்
**எம்.நிர்மல்**

வெளியீட்டாளர்
**எம்.நிலா**

வடிவமைப்பு
**வி.கிராபிக்ஸ்**
**கே.எம்.பிரசன்னா**

நிர்வாக இயக்குனர்
**அரசு கிருத்திகா**

முதன்மை செயல் அலுவலர்
**மணியன் கலியமூர்த்தி**

ஒருங்கிணைப்பாளர்
**ரத்தினபாண்டியன்**

**ஞானகுரு பப்ளிகேஷன் மூலம் மகிழ்ச்சி இதழ் வெளியிடப்படுகிறது. அலுவலக முகவரி :**

ஜி2, கோவிந்த் அபார்ட்மென்ட்,
6, ஏஜிஎஸ் காலனி 4வது தெரு,
கொட்டிவாக்கம், சென்னை - 41.
**தொடர்புக்கு:** +91 98409 03586,
72997 53999, 98844 53014
**இ.மெயில் :** skmnila1@gmail.com
**இணையதளம் :** www.gyaanaguru.com

₹

காரில் மட்டுமே போக முடியும். ஒரு படுக்கையில் மட்டுமே படுக்க முடியும். ஆனாலும், இதைவிட பெரிதாக, அதைவிட பெரிதாக என்று ஆசைப் பட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

அதனால் யாராவது ஒருவர் ஒரு லட்சம் ரூபாய்க்கு வாட்ச் வாங்கினேன். புதிய செல்போன் 2 லட்சம் ரூபாய் என்று காட்டும்போது, அவர் களுக்குக் கிடைத்திருக்கும் வாழ்க்கையை அலுத்துக்கொள்கிறார் கள். அவர்களை ஒப்பிடுகையில் மிகவும் கேவலமான ஒரு வாழ்க்கை வாழ்வதாக நினைக்கிறார் கள். தங்களிடம் எது இல்லையோ, அதையே உயர்வாக நினைக்கிறார்கள். அதோடு, அதை அடைய வில்லை என்றால் வாழ்க்கை முழுமையடையாது என்று நினைக்கிறார்கள். எனவே, திருப்தி இல்லாத ஒரு வாழ்க்கையை அலுத்துக்கொண்டு வாழ்கிறார்கள்.

ஒரு கோடி மதிப்பிலான கார், பிரைவேட் ஜெட், கடற்கரை வீடு, கெஸ்ட் ஹவுஸ், வெளிநாடு சுற்றுலா அனுபவிக்க வில்லை என்றால், இந்த வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லை என்றே நினைக்கிறார் கள். எனக்கு கொஞ்சம் அதிர்ஷ்டம் இருந்தால், யாராவது கை கொடுத்தால் இவற்றை எல்லாம் அடைந்துவிடலாம் என்றும் நினைக்கிறார்கள்.

இதற்குத் தேவை பணம் என்று நினைக்கிறார்கள்.

உண்மை என்ன தெரியுமா..? இவர்களுக்கு ஒருபோதும் மகிழ்ச்சியும் சந்தோஷமும் கிடைக்கவே செய்யாது. ஒரு பிரைவேட் ஜெட் வாங்கும் ஆசை நிறைவேறியதும், அடுத்ததாக அதை விட பெரிய சொகுசு விமானம் வாங்கும் ஆசை வரும். எனவே, ஆசைகளுக்கு முடிவுகள் கிடையாது.

ஆகவே, என்ன இருக்கிறதோ அதை அனுபவியுங்கள். உங்கள் வீட்டு ரோஜா அழகாகப் பூக்கும் போது, அடுத்தவீட்டு மல்லிகையைப் பார்த்து ஏங்குவதில் என்ன கிடைத்துவிடப் போகிறது.

எனவே, கனவை நிறைவேற்றுவதற்கு கடன் வாங்காதீர்கள். அது சுதந்திரத் திற்கு கொடுக்கப்படும் விலை.












## ஞானகுரு மகிழ்ச்சியாளர் சேர்க்கை ஆரம்பம்

# ஆயுள் சந்தா 1 லட்சம் ரூபாய்

மகிழ்ச்சியைப் பரப்பும் ஒரு புதிய மதம் ஞானகுரு.

ஆரோக்கிய உடல், நிம்மதியான மனம், போதுமான பணம் ஆகியவற்றுடன் ஆறுதலான உறவுகள் அமைவதே மனிதருக்கு மகிழ்ச்சி தருகிறது. இவற்றை ஒவ்வொரு நபரும் அடைவதற்கு வழிகாட்டும் வகையில் ஞானகுரு மகிழ்ச்சி, ஞானகுரு யாக்கை, ஞானகுரு தமிழ்லீடர் போன்ற மின்னிதழ்கள் நடத்தப்பட்டு வருகின்றன. ஞானகுரு பதிப்பகத்திலிருந்து நம்பிக்கையூட்டும் நூல்கள் வெளியாவதுடன், அன்றாடம் புதிய செய்திகளுடன் ஞானகுரு இணையம் - ஞானகுரு (gyaanaguru.com) இயங்கி வருகிறது. இவை எல்லாமே நிறைய வாசகர்களுக்கு சென்றடைய வேண்டும் என்பதற்காக கட்டணமின்றி வழங்கப்படுகின்றன. இந்த சேவையைத் தொடர்வதற்கும் மகிழ்ச்சியை அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லவும் ஞானகுரு மகிழ்ச்சியாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள். ஞானகுரு இயக்கத்தில் சேர்வதற்கு வாழ்நாள் சந்தா என ரூபாய் 1 லட்சம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நிறைய செல்வமும் பெரிய மனமும் உள்ளவர்கள் மட்டுமே இந்த இயக்கத்திற்கு செலவு செய்தால் போதும் என்பதற்காகவே இந்த தொகை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. மகிழ்ச்சியாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் போது நம்முடைய வாசகர்கள், ஞானகுரு ஆதரவாளர்கள் மற்றும் சமூகம் மகிழ்ச்சியுடன் வாழத் தொடங்கும். ஞானகுரு மகிழ்ச்சியாளராக இணைப வருக்கு மதிப்பளிக்கும் வகையில் ஞானகுரு மின்னிதழ்களின் அச்சு இதழ் வீட்டுக்கு அனுப்பிவைக்கப்படும். ஞானகுரு பதிப்பக புத்தகங்களும் வெளியாகும் தருணங்களில் அனுப்பப்படும். அதோடு மனவளக் கலை பயிற்சியளித்து தேர்ச்சி சான்றிதழ் வழங்கப்படும். ஞானகுரு குடும்பத்தில் இணைவதற்கு அன்போடு அழைக்கிறோம்.

தொகை அனுப்ப வேண்டிய முகவரி:
Gyanaguru Publication, Union Bank of India,
Current Account No. 548401010050639,
IFSC CODE : UBIN0554847, PAN : AKLPJ7628N

மேலும் தொடர்புக்கு : **எஸ்.கே.முருகன்** -
9840903586, 7299753999

# ஞானகுரு பதில்கள்

**?கர்மா பெரிதா... கடவுள் பெரிதா..?**

**- சி.மாணிக்கவாசகம், சேயூர்.**

**ஞானகுரு ;**

எந்த ஒரு செயலுக்கும் எதிர்வினை உண்டு என்பது அறிவியல். அதேபோல் ஒருவரது எண்ணம், வார்த்தை, செயல் போன்றவையும் மனிதருக்கே திரும்பிவரும் என்று பல்வேறு மதங்கள் சொல்கின்றன. இந்த ஜென்மத்தில் அல்லது அடுத்த ஜென்மத்தில் கூட பலன் கிடைக்கும் என்கிறார்கள். இதையே விதி அல்லது கர்மா என்கிறார்கள்.

பரிகாரம், பிரார்த்தனை செய்தால் பாவங்கள் தொலைந்துவிடும் என்று சொல்பவர்களே, விதியை மாற்றவே முடியாது என்றும் அடித்துச்சொல்வார்கள். கர்மாவை மாற்றவே முடியாது என்றால் கடவுள் எதற்கு..? கடவுளால் மாற்ற முடியும் என்றால் கர்மா எதற்கு..? கடவுளும் கர்மாவும் மனிதருக்குத் தேவையில்லாத ஆணிகள்.



**?எழுத்தாளன், கவிஞன் எப்படி உருவாகிறார்கள்..?**

**- டி.கண்ணன், காரியாபட்டி.**

**ஞானகுரு :**

எல்லா மனிதர்களிடமும் மிகச்சிறந்த கதை உண்டு. எல்லா மனிதர்களிடமும் கவிதை மனசு உண்டு. ஆனால் எல்லோரும் இதனை வெளிப்படுத்துவதில்லை. ஒரு சிலரை மட்டும் எழுத்துக்கள் தொந்தரவு செய்கின்றன. அவர்களே கவிஞர்களாக, கதாசிரியர்களாக மாறுகிறார்கள். பாரதி போல் பிறவியில் கவியாற்றல் என்பது அரிதிலும் அரிது. பெரும்பாலோர் நிறையப் படித்து, தங்கள் அறிவை வளர்த்து, பேனாவை கையில் எடுக்கிறார்கள்.





**?தங்கத்தில் புது டிசைன் நகையைப் பார்த்தாலே வாங்கும் ஆசை வருகிறது. இந்த ஆசையை எப்படி குறைப்பது..?**

**- பரிமளம். காங்கேயம்.**

**ஞானகுரு :**

மனிதரின் காலுக்குக் கீழே, அதாவது பூமிக்குள் பிரித்தெடுக்கப்படாத தங்கம் டன் கணக்கில் கொட்டிக் கிடக்கிறது. ஒவ்வொரு வங்கியிலும் செல்வந்தர் வீடுகளிலும் தங்கம் கட்டி கட்டியாகக் குவிந்து கிடக்கிறது. தங்கம் மட்டுமே அத்தனை நாடுகளிலும் செல்லுபடியாகும் ஒரே பணம். எனவே தங்கத்துக்காக கொலைகள், கொள்ளைகள் காலம்காலமாக நடந்துகொண்டே இருக்கிறது. தங்கத்தை வைத்திருக்கும் மனிதர்கள் மாறிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால், தங்கம் மட்டும் அப்படியே இருக்கிறது.

தங்கம் மனிதர்களை வசீகரிப்பதற்கு ஒரு ருசிகரமான கற்பனைக் கதை இருக்கிறது. அதாவது கடவுளுக்கும் சாத்தானுக்கும் நடந்த சண்டையில் சாத்தான் தோற்றுப் போகிறது. பாதாள லோகத்தில் பதுங்குவதற்கு முன்பு இரண்டு விஷயங்களை மட்டும் பூமியில் விட்டுச்செல்வதற்கு கடவுளிடம் சாத்தான் அனுமதி கேட்கிறது. கடவுளும் அனுமதிக்கிறார். உடனே தங்கத்தையும் பொறாமை குணத்தையும் பூமியில் விதைத்துவிட்டுச் சென்றன சாத்தான் என்று அந்த கதை முடியும். இது ஒரு கற்பனைக் கதை என்றாலும் உங்கள் ஆசைக்கு இதில் பதில் இருக்கிறது. தங்கமும், பொறாமைக் குணமும் ஒருபோதும் அமைதி தராது. எனவே, தங்கத்தை ஏளனமாகப் பார்க்கக் கற்றுக்கொள்ளுங்கள். அதுவே, தங்கத்திலிருந்து விடுதலை தரும்.

www.gyaanaguru.com





**?குழந்தை இல்லை என்பது கவலையாக இருக்கிறது.. இது சாபமா..?**

**- என்.ராமலட்சுமி, அரவக்குறிச்சி.**

**ஞானகுரு :**

மருத்துவ வளர்ச்சி உச்சம் அடைந்திருக்கும் நேரத்தில் குழந்தை இல்லை என்று கவலைப் படுவதற்கு அவசியமே இல்லை. உடலில் எப்படிப்பட்ட குறை இருந்தாலும் அதை சரி செய்து, சீர்செய்து அல்லது செயற்கை முறையில் குழந்தை பெற்றுக்கொள்ள முடியும். மருத்துவத்தில் முடியாது என்றால் தத்து எடுத்துக்கொள்ள முடியும். இதற்கும் விருப்பம் இல்லை என்றால் குழந்தை இல்லை என்ற சோகத்தை விட மிகப்பெரும் சோகத்தில் வாழும் சில தாய்மார்களைப் பாருங்கள். அதாவது, மனவளர்ச்சி குன்றிய குழந்தையைப் பெற்ற தாயின் வேதனையை உற்றுப் பாருங்கள். அது, மிகமிகக் கொடுமையானது. அந்தக் குழந்தையை நல்லபடியாக வளர்க்கவும் முடியாமல் கைவிடவும் முடியாமல் வாழ்நாள் முழுக்க அவஸ்தைப்படும் பெண்கள் எக்கச்சக்கம். இவர்களை ஒப்பிடுகையில் குழந்தை இல்லாதது சாபமல்ல, வரம் என்று புரியும்.

**?கும்பாபிஷேகம் எதற்காக நடத்தப்படுகிறது..?**

**- பி.சுசிலா, மாயூரம்.**

**ஞானகுரு ;**

புதிய கோயில் கட்டப்படும் நேரத்திலும், பழைய கோயில் புதுப்பிக்கப்படும் நேரத்திலும் கும்பாபிஷேகம் நடத்துகிறார்கள். ஹோமங்கள், விசேஷ பூஜைகள், கலச ஸ்தாபனம் செய்து மூர்த்தியை புனித நீரால் அபிஷேகம் செய்கிறார்கள். இந்த சடங்குகளை அனைத்து ஆன்மிக வாதிகளும் முக்கியம் என்று கருதுவது ஆச்சர்யம். ஏனென்றால் குறிப்பிட்ட காலத்தில் கடவுளுக்கும் கோயிலுக்கும் சக்தி குறைந்துவிடுகிறது என்பதாலே பழைய கோயிலுக்கு கும்பாபிஷேகம் செய்கிறார்கள். கடவுளுக்கு சக்தி குறையுமா..? மந்திரத்தால் கடவுளுக்கு சக்தி வந்துவிடுமா..? கோயிலுக்கும் கடவுளுக்கும் சக்தி வந்துவிட்டது என்பதை எப்படி முடிவு செய்கிறார்கள் என்பதெல்லாம் யாருக்கும் தெரியாத வியாபார ரகசியம்.





**?உண்மையாக பிறர் மீது அன்பு செலுத்தும் மனிதர்கள் உலகில் இருக்கிறார்களா..?**

**- எம்.ரதி, மீனாட்சி நகர்.**

**ஞானகுரு :**

மற்றவர்களுக்கு எப்படியோ, ஒவ்வொரு தாயும், தந்தையும் அவர்களுடைய பிள்ளைகள் மீது உண்மையான அன்பு செலுத்துகிறார்கள். இப்படி வீட்டுக்கு இருவர் நிச்சயம் இருக்கிறார்கள். எனவே, உலகம் முழுக்க கோடிக்கான மனிதர்கள் அன்பாகவே வாழ்கிறார்கள், அன்புக்காகவே வாழ்கின்றனர். அன்பு என்பது கொடுப்பது மட்டுமே தவிர, பிறரிடம் எதிர்பார்ப்பது அல்ல.

www.gyaanaguru.com

**?** எங்களுக்கு ஒரே மகள். இவள் நன்மைக்காக இன்னொரு பிள்ளை பெறாமல் அன்பு கொட்டி வளர்த்தாலும் அவள் எங்களை மதிப்பதே இல்லை. அவள் நடவடிக்கையால் அழுகை வருகிறது… என்ன செய்வது..?

**– ஜி.தெய்வலதா, தாராபுரம்**

**ஞானகுரு :**

நீங்களே பிள்ளை பெற்றீர்கள், அவர் உங்களை பெற்றெடுக்குமாறு கெஞ்சவில்லை. இன்னொரு பிள்ளை வேண்டாம் என்பதும் உங்கள் முடிவு. உங்கள் மகிழ்ச்சியை தியாகம் செய்யுங்கள் என்றும் அவர் கேட்கவில்லை. எனவே, இந்த காரணங்களுக்காக அவர் உங்களை மதிக்க வேண்டும், பாசத்தைப் பொழிய வேண்டும் என்று எதிர்பாப்பது நியாயம் இல்லை. நீங்கள் பெற்றெடுத்த கடமைக்கு அவரை நன்கு படிக்க வையுங்கள், நேர்மையுடனும் நிம்மதியுடனும் வாழ்வதற்கு வழி காட்டுங்கள். பருவ வயது வந்ததும் அவரது வாழ்க்கைப் பாதையை அவரே முடிவெடுக்கட்டும். அந்த முடிவுக்கு உதவி செய்யுங்கள். ஜெயித்தால் பாராட்டுங்கள், தோற்றால் ஊக்கம் கொடுங்கள். அதுவே, ஒரு நல்ல பெற்றோருக்கு அழகு. பிள்ளையிடம் பாசத்தை பிச்சை கேட்காதீர்கள். அவமானமே கிடைக்கும். இனியிருக்கும் வாழ்க்கையை உங்களுக்காக வாழுங்கள். உங்களுக்கு மகிழ்ச்சியானதை செய்யுங்கள்.



**?** குறுகிய காலத்தில் வாழ்க்கையைப் புரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். அதற்கு எங்கு செல்ல வேண்டும், என்ன கற்க வேண்டும்..?

**– பி.ராமநாதன், கிணத்துக்கடவு**

**ஞானகுரு :**

வாழ்க்கையைப் புரிந்துகொள்ளும் தேடுதல் வந்துவிட்டாலே விடை கிடைக்கத் தொடங்கிவிடும். கௌதம புத்தர் காடிய வழியை நீங்களும் கடைபிடியுங்கள். புத்தர் தனது சீடர்களுக்கு தீட்சை கொடுப்பதற்கு முன்பு, மயானத்தில் மூன்று மாதங்கள் தங்கியிருந்து உடல்கள் எரிவதையும் உறவினர்கள் நடத்தையையும் அறிந்துகொள்வதை ஒரு கட்டாயப் பாடமாக வைத்திருந்தார். மயானம் சீடர்களிடம் மிகப்பெரும் மாற்றத்தை உருவாக்கியது. உடல் பற்றி பெருமைப்படுவதும், கவலைப்படுவதும் எத்தனை அறியாமை என்பது தெரிந்துவிடும். மரணத்தைப் புரிந்துகொண்டால் வாழ்க்கையின் ஒவ்வொரு நொடியையும் கொண்டாட முடியும். நீங்களும் மரணத்தை வேடிக்கை பாருங்கள், வாழ்க்கை புரிந்துவிடும்.



**?** ஊழல் செய்பவர்கள், கொலை செய்பவர்கள் என எல்லோரும் தான் செய்வதை சரி என்று நினைக்கிறார்களே, அது எப்படி..?

**– ஏ.தேவிப்பிரியா, சூலூர்.**

**ஞானகுரு :**

ஒவ்வொரு மனிதரும் அவருடைய செயலுக்கு வழக்கறிஞராக இருக்கிறார்கள். அதாவது, தன்னுடைய தேவைக்காக எது செய்தாலும் அதை நியாயம் என்று நிரூபிக்க காரணங்கள் வைத்திருக்கிறார்கள். அதனாலே ஆணவக் கொலைகாரர்களும், ஊழல்வாதிகளும் சிறைக்குச் செல்லும்போது கொஞ்சமும் கலங்குவதில்லை. இதே செயலை மற்றவர் செய்யும்போது, அதை குற்றம் என்று சொல்லும் நீதிபதிகளாக மாறிவிடுகிறார்கள். பக்கத்து வீட்டுக்காரனுக்கு ஒரு தீமை நடந்துவிட்டது என்றால், கடவுள் தண்டனை, தனக்கு தீமை நேரும்போது கடவுள் தரும் சோதனை. இந்த சுயநலமே மனிதரின் நியாயம்.



**?** : ஒரு சிலருக்கு மட்டும் வெற்றி மேல் வெற்றி கிடைக்கிறதே, அது எப்படி..?

**– எஸ்.ராமலட்சுமி, திண்டுக்கல்.**

**ஞானகுரு :**

கிரிக்கெட்டில் ஒரு சில கேப்டன்கள் தொடர்ந்து டாஸ் ஜெயித்துக்கொண்டே இருப்பார்கள். இதனை அதிர்ஷ்டம் அல்லது திறமை என்று சொல்லிவிட முடியாது. அதாவது டாஸ் போடும்போது எல்லோருக்கும் 50% வெற்றிக்கு வாய்ப்பு உண்டு. ஆனால், சிலருக்கு தொடர்ந்து டாஸில் வெற்றி கிடைப்பது தற்செயல் மட்டுமே. இதை அதிர்ஷ்டம் அல்லது நல்ல நேரம் என்று சொல்வது சரியில்லை. இது ஒரு வாய்ப்பு. அவ்வளவுதான். ஏனென்றால் டாஸில் ஜெயிப்பதால் மட்டும் போட்டியை வென்றுவிட முடியாது. அதேநேரம், தொடர் வெற்றி பெறுபவர்களை ஆழ்ந்து நோக்கினால் சில விஷயங்களை அறிய முடியும். அதாவது, அவரது நோக்கம் தெளிவாக நேர்க்கோட்டில் இருக்கும். தடைகள் வந்தாலும் முயற்சியைக் கைவிட மாட்டார். தவறுகளிலிருந்து பாடம் கற்றுக்கொள்வார். இப்படி ஏராளமான காரணங்களாலே வெற்றி மேல் வெற்றி கிடைக்குமே தவிர, அதிர்ஷ்டத்தால் அல்ல.



**?** உடல் வலிமையால் தவறு செய்கிறார்களா அல்லது பண வலிமையினாலா..?

**– எஸ்.வீரலட்சுமி சந்தோஷ், கடலூர்.**

**ஞானகுரு :**

ஒருவருக்கு உடல் பலம் இருக்கிறது என்றால், அவர் சமாதானம் நாடுவாரே தவிர சண்டை போட மாட்டார். அதேபோல், பணம் வைத்திருப்பவர்கள் அதனை பாதுகாக்கவும் பெருக்கவும் நினைப்பார்களே தவிர, தவறு செய்து மாட்டிக்கொள்ள விரும்ப மாட்டார்கள். வாழ்வில் முன்னேறுவதற்கான ஆசையும் லட்சியமும் இல்லாதவர் மட்டுமே, குறுக்குவழியை தேர்வு செய்கிறார்.



**?** புனிதமான ஆசிரியர் பணியிலும் சிலர் தவறு செய்கிறார்களே… அரசு பள்ளி ஆசிரியர்களை விட தனியார் பள்ளி ஆசிரியர்கள் நன்றாக சொல்லித்தருவது எப்படி?

**– பி.சுந்தரேசன், கள்ளக்குறிச்சி.**

**ஞானகுரு :**

ஆசிரியர் பணி என்பது ஒரு வேலை மட்டுமே. போலீஸில் திருடர்கள் இருப்பது போன்று, நீதிபதிகளில் ஊழல்வாதிகள் இருப்பது போன்று ஆசிரியப்பணியிலும் அயோக்கியர்கள் சிலர் இருக்கத்தான் செய்வார்கள். அரசு பள்ளியில் 80 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிக்கொண்டு மாணவர்களுக்கு பாடம் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியரே, அவரது பிள்ளையை தனியார் பள்ளியில் 20 ஆயிரம் ரூபாய்க்கு வேலை பார்க்கும் ஆசிரியரை நம்பியே ஒப்படைக்கிறார். ஏனென்றால், தனியார் பள்ளி ஆசிரியர் தலைக்கு மீது எப்போதும் கத்தி தொங்கிக்கொண்டு இருக்கிறது.

**?** நீண்ட நாட்கள் வாழும் முதியவர்களிடம் ஆசிர்வாதம் வாங்குவது நன்மை தருமா..?

**– எஸ்.நல்லதம்பி, உறையூர்.**

**ஞானகுரு :**

நீண்ட காலம் வாழ்வதால் மட்டும் யாருடைய ஆசிர்வாதமும் பலன் கொடுக்காது. பலன் கிடைக்கும் என்றால் நூறாண்டுகள் தாண்டியும் உயிர் வாழும் மரங்களிடமும், ஆமையுடமும் தான் ஆசிர்வாதம் வாங்க வேண்டும். உண்மையில் செத்துப்போ என்று சொல்வதால் யாரும் செத்துவிட மாட்டார்கள். ஆயுஷ்மான் பவ என்பதால் யாரும் நீண்ட காலம் வாழ்வதும் இல்லை. ஒரு வகையில் நூறு ஆண்டுகள் வாழ்வது, வரமல்ல, தண்டனை. ஏனென்றால், அடுத்தவரை அண்டியே வாழவேண்டிய சூழல் வந்துவிடும்.





www.gyaanaguru.com

# புதிய பார்வை, புதிய கண்ணோட்டத்தில்
# இதிகாச நாவல்

ஞானகுரு
பதிப்பகம்
வெளியீடு

உங்கள்
பிரதிக்கு
80725
89355
அழைக்கவும்

| வண்ணப் புத்தகம் | கருப்பு வெள்ளை | இ-புக் |
|---|---|---|
| 600 ரூபாய் | 300 ரூபாய் | 150 ரூபாய் |

80725 89355 செல்போன் எண்ணுக்கு பணம், முகவரி அனுப்புங்கள். எங்கள் செலவில் புத்தகம் அனுப்பிவைக்கப்படும் க்யூ ஆர் கோடு மூலமாகவும், வங்கிக் கணக்கிலும் பணம் அனுப்பலாம்.
GYANAGURU PUBLICATION, UNION BANK OF INDIA,
IFS CODE : UBIN0554847,
Current Account No. 548401010050639


